# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை : திரு. செ. தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 48 /2017**

திரு. S. டொமி கொரைரா,
M/s ரோஸல் இன்ஞ்ஜினியரிங் ஒர்க்ஸ்,
எண்.64/B, சந்தை ரோடு,
தூத்துக்குடி – 628 002. . . . மேல்முறையீட்டாளர்
(திரு. நரசிம்மன், வழக்கறிஞர்)

எதிர்

உதவி பொறியாளர்/விநியோகம்/டவுன்,
கிழக்கு/தூத்துக்குடி,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
40, பீச் ரோடு,
தூத்துக்குடி – 628 001. . . . எதிர்மனுதாரர்
(திரு. C. இராபர்ட், உதவி பொறியாளர்/விநியோகம்/டவுன்/கிழக்கு/தூத்துக்குடி )

**கேட்புரை நாள் : 10–10–2017**

**ஆணை நாள் : 15.12.2017**

திரு. S. டொமி கொரைரா, M/s ரோஸல் இன்ஞ்ஜினியரிங் ஒர்க்ஸ், தூத்துக்குடி – 628 002 அவர்களின் 13.6.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.48/2017 ஆக பதிவு செய்யப்பட்டு மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 10.10.2017 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளர் VOC துறைமுக பொறுப்புக்கழக இடத்தின் யார்டு–3 தெற்கு கடற்கரை சாலை என்ற முகவரியில் முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலன் உரிமையாளர்கள் சங்கம் பெயரில் ஒப்பந்ததாரர் ஆவார். அதே முகவரியில் 2009 ஆம் ஆண்டு தொடங்கிய ரோசெல் இஞ்சினியரிங் ஒர்க்ஸ் என்ற ஸ்தாபனத்திற்கு LT மும்முனை மின் இணைப்பு வழங்க கேட்டுக் கொண்டுள்ளார்.

### 2. வழக்கின் சுருக்கம் :

2.1 மேல்முறையீட்டாளர் VOC துறைமுக பொறுப்புக்கழக இடத்தின் யார்டு–3 தெற்கு கடற்கரை சாலை என்ற முகவரியில் செயல்படுகின்ற அவரது ரோசெல் இஞ்சினியரிங் ஒர்க்ஸ் என்ற ஸ்தாபனத்திற்கு LT மும்முனை மின் இணைப்பு வழங்க கேட்டுக் கொண்டுள்ளார்.

2.2 மேற்படி இடத்திற்கு LT மும்முனை இணைப்பு வேண்டி துறைமுக பொறுப்புக்கழகத்திடமிருந்து தடையில்லா கடிதமும் பெற்று விண்ணப்பித்திருந்தார். ஆனால், அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

2.3 அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் தூத்துக்குடி மின் பகிர்மான வட்டத்தின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகி தனது முறையீட்டை 22.4.2017 அன்று சமர்ப்பித்துள்ளார். மன்றம் தன்னுடைய ஆணையை 31.5.2017 அன்று வழங்கியுள்ளது.

### 3. மன்றத்தின் தீர்வு

3.1 தூத்துக்குடி மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 31.5.2017 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>மன்றத்தின் முடிவு</u>*

*மனுதாரரின் வாதங்களையும் உரிமம்தாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட பதில்களின் அடிப்படையில் திரு. செ. டொமி கொரையரா ஆகிய தாங்கள் தற்போதைய நில உரிமைதாரரிடம் (வ.உ.சி துறைமுக பொறுப்புக்கழகம், தூத்துக்குடி)–ல் பெறப்பட்ட நடப்பு மாதத்திய வாடகை சான்று பெற்றுத்தரும் பட்சத்தில் தங்களுக்கு மின் இணைப்பு வழங்க உடனடியாக பரிசீலிக்கப்படும் என இம்மன்றம் உத்தரவிட்டு இம்மனுவை முடித்து வைத்திருக்கிறது ."*

4. **<u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>**

4.1 மனுதாரர் VOC துறைமுக பொறுப்பு கழக இடத்தின் யார்டு–3 தெற்கு கடற்கரை சாலை என்ற முகவரியில் முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலன் உரிமையாளர்கள் சங்கம் பெயரில் ஒப்பந்ததாரர் ஆவார். அதே முகவரியில் ரோசெல் இஞ்சினியரிங் ஒர்க்ஸ் என்ற ஸ்தாபனத்தையும் 2009 ஆம் ஆண்டு முதல் தொடங்கி நடத்தி வருகின்றார்.

4.2 மேற்படி இடத்திற்கு LT மும்முனை இணைப்பு வேண்டி துறைமுக பொறுப்புக்கழகத்திடமிருந்து தடையில்லாத கடிதமும் பெற்று விண்ணப்பத்திருந்தார். ஆனால், அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. அவரது தடையில்லா சான்று மறுக்கப்பட்டதாக கூறப்பட்டது.

4.3 எனவே அவர் TNERC Actன்படி படிவம் 6ல் உள்ள Annexure 3ன் படி பிணையுறுதி பத்திரத்துடன் valid proof of his / her being in occupationன் படி ரோசெல் இஞ்சினியரிங் ஒர்க்ஸ் என்ற பெயரில் விண்ணபித்திருந்தார்.

4.4 மீண்டும் நிராகரிக்கப்பட்டதால் 22.4.2017 அன்று மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் முறையீடுசெய்து அதன் அடிப்படையில் 31.5.2017 அன்று மேற்படி மனு மீது 11.00 மணி அளவில் விசாரணை நடைபெற்றதாகவும் விசாரணையின்போது மின் வாரிய அலுவலர்களுக்கு சாதகமாகவே நடத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

4.5 மேற்படி தீர்ப்பானது tnerc விதிகளுக்கு மாறாக இருப்பதாக கருதுவதால் மேல்முறையீட்டாளருக்கு பரிகாரம் வேண்டி இந்த மனுவை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>

5.1 09.07.2009 அன்று தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகத்தின் லைசென்ஸ் உத்திரவு படி Boat Yard No.3ஐ முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலம் உரிமையாளர்கள் சங்கத்திற்கு பல நிபந்தனைகளுடன் கடல் மார்க்கமாக வணிகத்தில் ஈடுபடும் சிறிய கப்பல்களை ரிப்பேர் செய்வதற்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. அந்த உரிமத்தின் அடிப்படையிலேயே முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலம் உரிமையாளர்கள் சங்கம் Boat yard எண்.3ஐ அனுபவித்து வந்துள்ளததாக தெரியவருகிறது. மேல்முறையீட்டாளர் கூறியுள்ளது போல் ரோசல் இன்ஞ்ஜியரிங் ஒர்க்ஸோ திரு. செ. டொமிகொரையராவோ முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலன் உரிமயாளர்கள் சங்கம் ஒப்பந்ததாரர் கிடையாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் திரு. டொமிகொரையரா ரோசல் இன்ஞ்ஜினியரிங் ஒர்க்ஸ் போர்ட்யார்டு எண்.3ல் மின்இணைப்பு கோர உரிமை கிடையாது.

5.2 முதலில் முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலம் உரிமையாளர்கள் சங்கம் பெயரில் தூத்துக்குடி துறைமுக பொறுப்பு கழகத்திடமிருந்து 14.12.2016 தேதிய தடையில்லா சான்றுடன் 16.12.2016 அன்று மின்இணைப்பு கோரி பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பம் செய்திருந்தார்கள். மேற்படி விண்ணப்பத்தை பிரிவு அலுவலகத்தில் process செய்து கொண்டிருந்த போதே தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகத்திலிருந்து 28.12.2016 அன்று அவர்கள் 14.12.2016 வழங்கிய தடையில்லா சான்றிதழை வாபஸ் வாங்குவதாகவும் முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலன் உரிமையாளர்கள் சங்கத்திற்கு மின்இணைப்பு வழங்க அவர்களுக்கு ஆட்சேபனை இருப்பதாகவும் கூறி ஓர் கடிதம் பிரிவு அலுவலகத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்கள்.

5.3 அதன் அடிப்படையில் பிரிவு அலுவலகத்திலிருந்து முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலன் உரிமயாளர்கள் சங்கத்திற்கு தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகத்திலிருந்து புதிதாக தடையில்லா சான்றிதழ் பெற்று சமா்ப்பிக்கும் பட்சத்தில் மின்இணைப்பு வழங்கப்படும் என்று 02.01.2017 கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. ஆனால், அவர்கள் தடையில்லா சான்றிதழ் பெற்று இதுநாள் வரை சமா்ப்பிக்கவில்லை.

5.4 அதன் பிறகு 10.3.2017 அன்று திரு. டொமி கொரையரா என்பவர் Boat yard 3க்கு ரோசல் இன்ஜினியரிங் பெயரில் மின்இணைப்பு வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார்.

5.5 மேற்படி விண்ணப்பத்திலும் திரு. டொமி கொரையரா தூத்துக்குடி துறைமுக பொறுப்பு கழகத்திலிருந்து புதிதாக தடையில்லா சான்றிதழ் ஏதும் பெற்று சமர்ப்பிக்காமல் முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலன் உரிமயாளர்கள் சங்கம் பெயரில் மின்இணைப்பு பெற ஏற்கெனவே 16.12.2016–ல் சமர்ப்பித்து ரத்து செய்யப்பட்ட 14.12.2016 நாளிட்ட தடையில்லா சான்றிதழை மட்டும் மறுபடியும் இணைத்தும் முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலன் உரிமயாளர்கள் சங்கம் ரோசல் இன்ஜியரிங் ஒர்க்ஸிற்கு Boat yard No.3 ஒப்படைத்து விட்டதாக கூறி அதன் அடிப்படையில் ரோசல் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பெயரில் மின்இணைப்பு வழங்க authorization கடிதம் வழங்கியிருப்பதாகவும் தெரிவித்து அக்கடித்தை இணைத்து அனுப்பியுள்ளார்.

5.6 மேலும், மேற்படி authorization கடிதம் 9.7.2009 ஆணையின் மூலம் வழங்கப்பட்ட லைசென்ஸ் ஒப்பந்தத்திற்கு புறம்பாக ரோசல் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்க்கு assignment செய்துள்ளதால் அந்த assignment செல்லத்தக்கதல்ல.

5.7 அது ஒரு lawful occupation என்று நீரூபணம் செய்யும் வகையில் பிரிவு அலுவலகத்திலிருந்து தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகத்திலிருந்து தடையில்லா சான்று பெற்று சமர்ப்பிக்குமாறு திரு. டொமி கொரையராவிற்கு (ரோசல் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்) 20.3.2017 நாளிட்ட கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. அதன் பிறகும் இதுநாள் வரை திரு. டொமிகெரையரா (ரோசல் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்) அவர்கள் தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகத்திலிருந்து தடையில்லா சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்கவில்லை. அதனால் அவருக்கு இதுநாள்வரை மின்இணைப்பு வழங்கப்படவில்லை.

5.8 பிரிவு அலுவலகத்திலிருந்து திரு. டொமிகொரையராவின் ரோசல் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் க்கு மின்இணைப்பு வழங்காததில் எந்த ஒரு விதி மீறலும் இல்லை. மனுதாரர் ரோசல் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் VOC துறைமுக பொறுப்புக் கழகத்தின் கீழ் லைசென்சீயே கிடையாது. எனவே மனுதார் ஆனவர் மின்இணைப்பு பெறுவதற்கு சட்டப்படி தகுதி இல்லாதவர்.

5.9 TNERC விதியின்படி lawful Occupation உள்ள விண்ணப்பதாரர்களுக்குத்தான் indemnity bond வாங்கிக் கொண்டு மின் இணைப்பு வழங்க வழிவகை கூறி உள்ளது. மனுதாரர் போல் உரிமை இல்லாமல் இருப்பவர்களுக்கு indemnity bond வாங்கி கொண்டு மின்இணைப்பு வழங்க அதில் வழிவகை இல்லை.

## 6 <u>Written submission filed on behalf of the Petitioner:</u>

6.1 The respondent has refused the petitioner's application on the ground that the petitioner has not submitted the no objection certificate from Tuticorin Port Trust. The respondent has taken a stand that as per TNERC rule, EB connection can be given on indemnity bond by the person who is in lawful occupation and that the petitioner has no right or title and that he is a trespasser and there is no legal provision to grant EB connection on obtaining bond to him. The respondent has further contended that the petitioner has got possession of the property against the terms and conditions of the Licence issued by Tuticorn Port Trust and hence he is an unauthorized person/trespasser. The respondent further claims that trespasser/encrocher will not come under the definition of lawful occupation.

6.2 The respondent has not adduced any documents to show that he is in occupation of the property as a trespasser or encroacher or unlawful occupant.

6.3 No litigation filed against the petitioner by Tuticorin Port Trust for eviction of the petitioner is pending before any other Court.

6.4 Rule 4 of TN Electricity Distribution code, 2004 is reproduced hereunder :

*(4) An intending consumer who is not the owner of the premises shall produce a consent letter in Form 5 of Annexure III to this code from the owner of the premises for availing the supply. If the owner is not available or refuses to give consent letter, the intending consumer shall produce valid proof of his/her being in occupation of the premises and also execute an indemnity bond in Form 6 of the Annexure III to this code indemnifying the licencee against any loss on account of dispute arising out of effecting Service connection to the occupant and acceptance to pay security deposit twice the normal rate.*

6.5 In the above provision there are three conditions. The first condition is the service connection can be effected to the indending consumer even if the owner refuses to give consent letter. The second main condition is that the intending consumer shall produce valid proof of his/her being in occupation of the premises. Third condition is that the intending consumer shall also execute an indemnity bond in Form 6 of the Annexure III to this code indemnifying the licencee against any loss on account of disputes arising out of effecting service connection to the occupant and acceptance to pay security deposit twice the normal rate.

6.6 When the legal provision is very clear about the conditions under which a new connection can be given, the respondent cannot put up any new condition and deny the petitioner's request stating that the petitioner's occupation' is that of trespasser/encroacher/unlawful occupant and hence he is not eligible for the EB connection.

6.7 Further in the letter dated 28.12.2016, it is mentioned that " the allotment is likely to be cancelled", which means that the petitioner is a lawful possession holder. In such circumstances the respondent theory that the petitioner is a trespasser is unsustainable and motivated. The act of the respondent is nothing but a violation of electricity law and against the Constitution law.

6.8 The Indemnity bond is executed only to safeguard the interest of TNEB in the event of any loss on account of dispute arising out of effecting service connection. Further the acceptance of the intending consumer to pay security deposit twice the normal rate is required to be obtained. So, TNEB has nothing to do with the dispute if any, between the petitioner and Tuticorin Port Trust.

6.9 TNEB can very well disconnect the power supply and remove their installations viz meter posts etc. at any time if ultimately the Port Trust, evicted the petitioner.

6.10 Sec.43 of The Electiricity Act 2003 is reproduced hereunder:

*43. Duty to supply on request: (1) Every distribution licencee, shall on an application by the owner or occupier of any premises, give supply of electricity to such premises, within one month after receipt of the application requiring such supply.*

From the above, it is the duty of the TNEB to provide supply within one month of the application.

6.11 Our Hon'ble Madras High Court in the judgment reported in 2013 (6) CTC 849 has clearly held that denial of electricity supply to petitioners in violation of fundamental right guaranteed to citizens under Art.21 of Constitution and that rejection of request of petitioners on ground that they were mere occupiers of govt. poromboke lands held amounting to discrimination and violative of Art.14 of Constitution and the petitioners being occupiers of promoboke land, entitled to electricity supply, same being a basic amenity and necessary for decent survival and directed the EB to effect supply electricity connection based on the applications along with necessary undertaking and indemnity bond.

**7. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>**

**7.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக **10.10.2017** அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

**7.2** திரு.நரசிம்மன், வழக்கறிஞர் அவர்கள் மேல்முறையீட்டாளரின் சார்பாக கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

**7.3** எதிர்மனுதாரர் சார்பில் C.இராபர்ட், உதவி பொறியாளர்/டவுன்/கிழக்கு/தூத்துக்குடி அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

**8. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள் :</u>**

**8.1** மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார். மேலும் தான் VOC துறைமுக பொறுப்பு கழக இடத்தின் யார்டு–**3** தெற்கு கடற்கரை சாலை என்ற முகவரியில் முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலன் உரிமையாளர்கள்

சங்கம் பெயரில் ஒப்பந்தம் பெற்று அதே முகவரியில் ரோசெல் இஞ்சினியரிங் ஒர்க்ஸ் என்ற ஸ்தாபனத்தையும் 2009 ஆம் ஆண்டு முதல் தொடங்கி நடத்தி வருவதாக தெரிவித்தார்.

**8.2** எனவே அவர் வாடகை ஒப்பந்ததாரர் என்ற அடிப்படையில் TNERC Act- ல் உள்ள படிவம் 6 (Annexure 3)–ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பிணையுறுதி பத்திரத்துடன் valid proof of his / her being in occupation என்பதற்கு உரிய ஆவணங்கள் அளித்து ரோசெல் இஞ்சினியரிங் ஒர்க்ஸ் என்ற பெயரில் தான் மின்இணைப்பு பெற தகுதியானவர் என்று தெரிவித்தார்.

**8.3** ஆனால் அவருடைய விண்ணப்பம் நிராகரிக்ககப்பட்டது TNERC விதிகளுக்கு மாறானது என்பதால் தனக்கு குடியிருப்போர் என்ற முறையில் மின் இணைப்பு வழங்க ஆவண செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

**9.** **<u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள் : -</u>**

**9.1** திரு. C. இராபர்ட், உதவி பொறியாளர்/விநியோகம்/டவுன்/கிழக்கு/தூத்துக்குடி தன்னுடைய பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார். மேலும் மேல்முறையீட்டாளர் கூறியுள்ளது போல் ரோசல் இன்ஞ்ஜியரிங் ஒர்க்ஸோ திரு. செ. டொமிகொரையராவோ முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலன் உரிமையாளர்கள் சங்க ஒப்பந்ததாரர் கிடையாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் திரு. டொமிகொரையரா ரோசல் இன்ஞ்ஜினியரிங் ஒர்க்ஸ் போட்யார்டு எண்.3ல் மின்இணைப்பு கோர உரிமை கிடையாது என்று தெரிவித்தார்.

**9.2** திரு. டொமி கொரையரா அவர்கள் தூத்துக்குடி துறைமுக பொறுப்பு கழகத்திலிருந்து புதிதாக தடையில்லா சான்றிதழ் ஏதும் பெற்று சமர்ப்பிக்காமல் முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலன் உரிமையாளர்கள் சங்கம் அவர்கள் மின்இணைப்பு பெற ஏற்கெனவே 16.12.2016ல் சமர்ப்பித்து ரத்து செய்யப்பட்ட 14.12.2016 தேதிய தடையில்லா சான்றிதழை மட்டும் மறுபடியும் இணைத்து உள்ளார் என்று தெரிவித்தார்.

**9.3** மேலும் முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலன் உரிமயாளர்கள் சங்கம் ரோசல் இன்ஜியரிங் ஒர்க்ஸிற்கு Boat yard No.3 ஒப்படைத்து விட்டதாக கூறி அதன் அடிப்படையில் ரோசல் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பெயரில் மின்இணைப்பு வழங்க authorization வழங்கியிருப்பதாக தெரிவித்து அதற்குண்டான கடிதத்தையும் இணைத்து அனுப்பியுள்ளார்.

9.4 மேற்படி authorization கடிதம் முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலன் உரிமயாளர்கள் சங்கம் மற்றும் VOC துறைமுக பொறுப்பு கழகம் ஆகியோர் செய்து கொண்ட 9.7.2009 ஆணையின் மூலம் வழங்கப்பபட்ட லைசென்ஸ் ஒப்பந்தத்திற்கு புறம்பாக ரோசல் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்க்கு assignment செய்துள்ளதால் அந்த assignment செல்லத்தக்கதல்ல என்றும் வாதிட்டார்.

9.5 எனவே தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகத்திலிருந்து தடையில்லா சான்று பெற்று சமர்ப்பிக்குமாறு திரு. டொமி கொரையராவிற்கு (ரோசல் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்) 20.3.2017 நாளிட்ட கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. அதன் பிறகும் இதுவரை தடையில்லா சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்கப்படவில்லையாதலால் அவருக்கு இதுநாள்வரை மின்இணைப்பு வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

9.6 திரு. டொமிகொரையராவின் ரோசல் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்–க்கு மின்இணைப்பு வழங்காததில் எந்த ஒரு விதி மீறமும் இல்லை எனவும் மனுதாரர் VOC துறைமுக பொறுப்புக் கழகத்தின் கீழ் லைசென்சீயே கிடையாது என்பதால் மின்இணைப்பு பெறுவதற்கு சட்டப்படி தகுதி இல்லாதவர் என்று தெரிவித்தார்.

9.7 TNERC விதியின்படி lawful Occupation உள்ள விண்ணப்பதாரர்களுக்குத்தான் indemnity bond வாங்கிக் கொண்டு மின் இணைப்பு வழங்க வழிவகை கூறி உள்ளது. மனுதாரைப் போல் உரிமை இல்லாமல் இருப்பவர்களுக்கு indemnity bond வாங்கி கொண்டு மின்இணைப்பு வழங்க அதில் வழிவகை இல்லை எனவும் தெரிவித்தார்.

## 10. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

10.1 முத்துநகர் தோணி மற்றும் மிதவைகலம் உரிமையாளர்கள் சங்கத்திலிருந்து 16.12.2016 அன்று மின்னிணைப்பு கோரி 14.12.2016 தேதியிட்ட தடையில்லா சான்றுடன் பிரிவு அலுவலத்தில் விண்ணப்பம் அளித்து இதுநாள்வரை நிலுவையிலுள்ளதாக தெரிவித்துள்ள வாதங்கள் தீர்விற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. மேல்முறையீட்டாளரால் 10.03.2017 அன்று மின்னிணைப்பு கோரி சமர்பிக்கப்பட்ட விண்ணப்பம் சம்பந்தாக மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் வழங்கிய ஆணையின் மேல்முறையீடு சம்பந்தமான வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

**10.2** இந்த மேல்முறையீட்டு வழக்கில் இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

i) ஒரு வாடகைதாராருக்கு மின் இணைப்பு வழங்க ஒழுங்குமுறை விதிகளில் கூறப்படுவது யாது ?

ii) ஒரு வாடகைதாரர் என்ற முறையில் மேல்முறையீட்டாளருக்கு மின்இணைப்பு வழங்க இயலுமா ?

**11.** **<u>வழக்கெழு வினா 1–ற்கான தீர்வு–</u>**

**11.1** வாடகைதாரர் / குடியிருப்போர் என்ற முறையில் ஒரு தாழ்வழுத்த மின் இணைப்பு வழங்க நாம் தமிழ்நாடு மின் பகிர்மான விதி **27(4)**–ஐ ஆராய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"Requisitions for Supply of Energy:***

*(1) *******

*(2) *******

*(3) *******

*(4). An intending consumer who is not the owner of the premises shall produce a consent letter in Form 5 of Annexure III to this code from the owner of the premises for availing the supply. If the owner is not available or refuses to give consent letter, the intending consumer shall produce valid proof of his/her being in occupation of the premises and also execute an indemnity bond in Form 6 of the Annexure III to this code indemnifying the licensee against any loss on account of disputes arising out of effecting service connection to the occupant and acceptance to pay security deposit twice the normal rate.*

*[Explanation:- For the purpose of this sub-regulation, the expression "valid proof" means any proof of occupancy such as registered power of attorney or latest rent receipt issued prior to the date of application or lease deed or possession order from appropriate authority or decree or judgment of Courts.]*

**11.2** மேற்கண்ட விதியை கூர்ந்து நோக்கும்பொழுது நாம் அறிவது இருப்பிடத்திற்கு சொந்தக்காரராக இல்லாமல் மின் வழங்கல் கேட்கும் நுகர்வோராக விருப்பம் உள்ளவர், அதைப்பெற இந்த விதித்தொகுப்பின் பின்னிணைப்பு III ல் உள்ள படிவம் **5**–ன் படியான சம்மதக்கடிதத்தை இருப்பிட உரிமையாளரிடமிருந்து பெற்றுத்தரவேண்டும். சொந்தக்காரர் இல்லையென்றாலோ அல்லது சம்மதக்கடிதம் தர மறுத்து விட்டாலோ, நுகர்வோராக

விருப்பமுள்ளவர் அந்த இடத்தில் குடியிருப்பதற்கான செல்லத்தக்க சான்றை (கீழே குறித்துரைக்கப்பட்டவாறு) தரவேண்டும். மேலும், இவ்விதியின் பின்னிணைப்பு III –ல் படிவம் 6–ன் படியான காப்புறுதி பத்திரத்தின் வாயிலாக, குடியிருப்பவருக்கு மின்னிணைப்பு வழங்குவதால் உருவாகும் தகராறுகளால் உரிமம்தாரருக்கு விளையும் இழப்புக்குக் காப்புறுதி தந்து, மேலும் இயல்பான காப்புறுதித் தொகையைப்போல இரட்டிப்பு மடங்குத்தொகையை காப்புறுதித் தொகையாகச் செலுத்தவும் உறுதியேற்க வேண்டும் என்று தெரிகிறது.

(செல்லத்தக்க சான்றிற்கான விளக்கம் – இந்த உள்ஒழுங்குமுறை விதிக்காக, "செல்லத்தக்க சான்று" என்றால் பதிவு செய்யப்பட்ட அதிகார அளிப்பு ஆவணம் அல்லது மின்னிணைப்பிற்கான தேதிக்கு முன் அளிக்கப்பட்ட சமீபத்திய ரசீது அல்லது குத்தகை ஒப்பாவணம் அல்லது நீதிமன்ற தீர்ப்புகள் / உத்தரவுகள் அல்லது உரிய அதிகார அமைப்பிடமிருந்து பெறப்பட்ட உடைமை கட்டளை போன்ற குடியிருப்பு சான்று.

**11.3** எனவே, இருப்பிடத்திற்கு சொந்தக்காரராக இல்லாமல் மின் வழங்கல் கேட்கும் நுகர்வோராக விருப்பம் உள்ளவர், அதைப்பெற இருப்பிட உரிமையாளரிடமிருந்து சம்மதக்கடிதம் பெற்றுத்தர முடியாத சூழ்நிலையில் அந்த இடத்தில் குடியிருப்பதற்கான செல்லத்தக்க சான்றாவணத்துடன் தமிழ்நாடு மின்பகிர்மான விதி 27 (4)–ன்படி பின்னிணைப்பு III –ல் படிவம் 6–ன் படியான காப்புறுதி பத்திரத்தையும் வழங்கவேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12. <u>வழக்கெழுவினா 2–ற்கான தீர்வு–</u>**

**12.1** மேல்முறையீட்டாளர் தான் VOC துறைமுக பொறுப்பு கழக இடத்தின் யார்டு–3 தெற்கு கடற்கரை சாலை என்ற முகவரியில் முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலன் உரிமையாளர்கள் சங்கம் பெயரில் ஒப்பந்தம் பெற்று அதே முகவரியில் ரோசெல் இஞ்சினியரிங் ஒர்க்ஸ் என்ற ஸ்தாபனத்தையும் 2009 ஆம் ஆண்டு முதல் தொடங்கி நடத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.

**12.2** மேல்முறையீட்டாளர் தமிழ்நாடு மின்பகிர்மான விதி 27 (4)–ன்படி கீழ்க்காணும் மூன்று நிலைகளை பூர்த்தி செய்யும் நுகர்வோருக்கு மின் இணைப்பு வழங்க சட்டத்தின்படி வழிவகை உண்டு என்று அவருடைய எழுத்துபூர்வ மனுவில் குறிப்பிட்டுள்ளார். அவையாவன–

(1) சொந்தக்காரர் இல்லையென்றாலோ அல்லது சம்மதக்கடிதம் தர மறுத்து விட்டாலோகூட மின் வழங்கல் கேட்கும் நுகர்வோருக்கு மின் இணைப்பு தரலாம்.

(2) அவ்வாறு கோரும் நுகர்வோர் அந்த இடத்தில் குடியிருப்பதற்கான செல்லத்தக்க சான்றை அளிக்கவேண்டும், மற்றும்

(3) இவ்விதியின் பின்னிணைப்பு III –ல் படிவம் 6–ன் படியான காப்புறுதி பத்திரத்தின் வாயிலாக, குடியிருப்பவருக்கு மின்னிணைப்பு வழங்குவதால் உருவாகும் தகராறுகளால் உரிமம்தாரருக்கு விளையும் இழப்புக்குக் காப்புறுதி தந்து, மேலும் இயல்பான காப்புறுதித் தொகையைப்போல இரட்டிப்பு மடங்குத்தொகையை காப்புறுதித் தொகையாகச் செலுத்தவும் உறுதியேற்க வேண்டும்.

12.3 ஆனால் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களை ஆராயும் பொழுது தூத்துக்குடி துறைமுக பொறுப்பு கழகம் 09.07.2009 நாளிட்ட ஒதுக்கீட்டு உரிமத்தின்படி (Turicorin Port Trust Estate Management Section No.E(c)-56/30.2008-Estate 2961/dated 09.07.2009) முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலன் உரிமையாளர்கள் சங்கம் Boat Yard No.3ஐ கடல் மார்க்கமாக வணிகத்தில் ஈடுபடும் சிறிய கப்பல்களை ரிப்பேர் செய்வதற்கு சில நிபந்தனைகளுடன் உரிமம் வழங்கியுள்ளதாக தெரிகிறது. இந்த ஒப்பந்த உரிமையானது தூத்துக்குடி துறைமுக பொறுப்பு கழக 14.12.2016 நாளிட்ட கடிதத்தின்படி தற்பொழுதுவரை நடைமுறையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

12.4 மேற்கண்ட 09.07.2009 நாளிட்ட ஒதுக்கீட்டு உரிமத்தில் உள்ள நிபந்தனைகளின்படி தூத்துக்குடி துறைமுக பொறுப்பு கழக யார்டு–3 ற்கான இடத்தை முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலன் உரிமையாளர்கள் சங்கம் மட்டுமே பயன்படுத்த முடியும் என்று தெரிகிறது.

12.5 எனவே 09.07.2009 நாளிட்ட ஒதுக்கீட்டு உரிமத்தின்படி திரு.டொமிகொரையராவின் ரோசல் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்னாது VOC துறைமுக பொறுப்பு கழகத்தின் நேரடி வாடகை ஒப்பந்த உரிமம் கொண்டவராக கருதமுடியாது.

12.6 ஆகையால், திரு.டொமிகொரையராவின் ரோசல் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்க்கு முத்து நகர் தோணி மற்றும் மிதவைகலன் உரிமையாளர்கள் சங்கம் மின்னிணைப்பு பெற்றுக்கொள்ள அளித்த 04.03.2017 நாளிட்ட தடையில்லா சான்றிதழ் ஏற்கத்தக்கதல்ல என்ற எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக இருக்கிறது.

**12.7** மேலும், திரு.டொமிகொரையராவின் ரோசல் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் அவர்கள் தற்போதைய நில உரிமைதாரரான தூத்துக்குடி துறைமுக பொறுப்பு கழக நிர்வாகத்திடம் தமிழ்நாடு மின்பகிர்மான விதி 27 (4)–ல் குறிப்பிட்டுள்ள குடியிருப்பதற்கான செல்லத்தக்க சான்றை பெற்றுத்தரும் பட்சத்தில் மின் இணைப்பு வழங்கப்படும் என்ற தூத்துக்குடி மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற உத்தரவு எனக்கு ஏற்புடையதாக இருக்கிறது என்று தீர்வுசெய்யப்படுகிறது.

**12.8** மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் கேட்புரை நாளில் மதராஸ் உயர்நீதி மன்றம் 27.09.2013 அன்று W.P.No.17608 of 2013 & M.P.No.1 of 2013 - T.M.Prakash and others Vs. The District Collector and SE/TNEB Tiruvannamalai என்ற வழக்கில் வழங்கிய தீர்ப்பில் அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் வழக்கு சம்பந்தப்பட்ட மனுதாரர்களுக்கு உறுதிமொழியுடன் கூடிய காப்புறுதி பத்திரத்தை அளிக்கும் நேர்வில் மின் இணைப்பு வழங்கலாம் என்று ஆணையிடப்பட்டுள்ளதாக தெரிவித்து அந்த ஆணையின் நகலையும் சமர்ப்பித்தார்.

**12.9** மேற்கண்ட வழக்கின் தீர்ப்பு 2013–ம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்பகிர்மான விதி 27(12)–ல் 03.12.2014 முன்புவரை அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருப்போர் துணை வட்டாட்சியரிடம் தடை இல்லா சான்று பெறமுடியாத நிலையில் உறுதிமொழியுடன் கூடிய காப்புறுதி பத்திரம் அளிக்கும் நேர்வில் மின்னிணைப்பு வழங்க வழிவகையிருந்தது. பின்பு ஆணையத்தின் அறிவிக்கை எண். TNERC/DC/8-21,dated 7.10.2014, (w.e.f 3.12.2014)–ன் படி 03.12.2014–ற்கு பின்பு அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருப்போர் சம்பந்தப்பட்ட தமிழ்நாடு அரசு அதிகாரியிடமிருந்து தடையில்லா சான்று பெற்று சமர்பித்தால் மட்டுமே தற்பொழுது மின்னிணைப்பு வழங்கும் நடைமுறையுள்ளது.

**12.10** ஆனால் என்முன்னாலுள்ள வழக்கில் மேல்முறையீட்டாளர் அரசு புறம்போக்கு நிலத்தில் மின்னிணைப்பு கோரவில்லை. மின்னிணைப்பு கோருமிடம் தூத்துக்குடி துறைமுக கழத்திற்கு உரிமையான இடமாகும். எனவே மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் சமர்பித்த உயர்நீதி மன்ற ஆணை இவ்வழக்கிற்கு பொருந்தாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**13. <u>முடிவுரை</u>**

**13.1** என்னுடைய வழக்கெழுவினா ஒன்று மற்றும் இரண்டிற்கான தீர்வுகளின்படி தூத்துக்குடி மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வில், மாற்றம் எதுவும் செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**13.2** மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.48/2017 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. S. டொமி கொரைரா,
M/s ரோஸல் இன்ஞ்ஜினியரிங் ஒர்க்ஸ்,
எண்.64/B, சந்தை ரோடு,
தூத்துக்குடி – 628 002.

2) உதவி பொறியாளர்/விநியோகம்/டவுன்,
கிழக்கு/தூத்துக்குடி,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
40, பீச் ரோடு, தூத்துக்குடி – 628 001.

3 தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
131–132, எட்டயபுரம் ரோடு, தூத்துக்குடி – 628 001.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **<u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.